செ.வெ.எண்: 16 நாள்: 10.03.2021

**பெரம்பலூர் மாவட்டம்**
**தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல்-2021**
**வாக்குப்பதிவு இயந்திரங்கள் கணினி மூலம்**
**குலுக்கல் முறையில் ஒதுக்கீடு செய்யும் முதற்கட்ட பணி**
**மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர்**
**திருமதி ப. ஸ்ரீவெங்கடபிரியா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது:-**

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல்-2021 நடைபெறவுள்ளதையொட்டி, சட்டமன்ற தொகுதிகளில் வாக்குச்சாவடி வாரியாக பயன்படுத்தப்பட வேண்டிய வாக்குப்பதிவு இயந்திரங்களை கணினி மூலம் (Randomization) குலுக்கல் முறையில் ஒதுக்கீடும் செய்யும் முதற்கட்ட பணி மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் திருமதி. ப. ஸ்ரீவெங்கடபிரியா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்கள் முன்னிலையில் இன்று (10.03.2021) நடைபெற்றது.

**இப்பணியின் போது, மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் அவர்கள் தெரிவித்ததாவது,**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் - 2021 நடைபெறவுள்ளதையொட்டி, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்கள் முன்னிலையில் பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள சட்டமன்ற தொகுதிகளில் வாக்குச்சாவடி வாரியாக பயன்படுத்தப்பட வேண்டிய வாக்குப்பதிவு இயந்திரங்களை கணினி மூலம் ஒதுக்கீடும் செய்யும் முதற்கட்ட பணி இன்றைய தினம் நடைபெற்றது.

அதன்படி, 20 சதவீத இருப்புடன் 147.பெரம்பலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 428 வாக்குச்சாவடி மையங்களுக்கு (Polling Station) 514 கட்டுப்பாட்டு கருவியும் (Control Unit), 514 வாக்குப்பதிவு இயந்திரங்களும் (Ballot Unit) மற்றும் வாக்காளர்கள் யாருக்கு வாக்களித்தோம் என்பதனை உறுதிசெய்யும் கருவி 28 சதவீத இருப்புடன் 548 (VVPAT) இயந்திரங்களும்,

20 சதவீத இருப்புடன் 148.குன்னம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 388 வாக்குச்சாவடி மையங்களுக்கு (Polling Station) 466 கட்டுப்பாட்டு கருவியும் (Control Unit), 466 வாக்குப்பதிவு இயந்திரங்களும் (Ballot Unit) மற்றும் வாக்காளர்கள் யாருக்கு வாக்களித்தோம் என்பதனை உறுதிசெய்யும் கருவி 28 சதவீத இருப்புடன் 497 (VVPAT) இயந்திரங்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் உள்ள இரண்டு சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட 816 வாக்குச்சாடி மையங்களுக்கு 979 கட்டுப்பாட்டு கருவியும் (Control Unit), 979 வாக்குப்பதிவு இயந்திரங்களும் (Ballot Unit), மற்றும் வாக்காளர்கள் யாருக்கு வாக்களித்தோம் என்பதனை உறுதிசெய்யும் கருவியான 1044 (VVPAT) இயந்திரங்களும என மொத்தம் 3003 கருவிகள் மற்றும் இயந்திரங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வாக்குப்பதிவின் போது இயந்திரங்கள் பழுதுகள் ஏற்படின், அதனை நிவர்த்தி செய்திடும் பொருட்டு, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மேற்கண்ட ஒதுக்கீட்டில் ஒரு சட்டமன்ற தொகுதிக்கு தலா 20 சதவிகிதம் கட்டுப்பாட்டு கருவியும் (Control Unit), வாக்குப்பதிவு இயந்திரங்களும் (Ballot Unit), 28 சதவிகிதம் (VVPAT) யாருக்கு வாக்களித்தோம் என்பதனை உறுதிசெய்யும் இயந்திரங்களும் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது, மாவட்ட கூடுதல் தேர்தல் அலுவலர் /மாவட்ட வருவாய் அலுவலர் செ.ராஜேந்திரன், ஒருங்கிணைப்பு அலுவலர் (மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள்)/ மாவட்ட வருவாய் அலுவலர் (சர்க்கரை ஆலை) திரு. என். கதிரேசன், பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர்/சார் ஆட்சியர் திருமதி ஜே.இ.பத்மஜா, இ.ஆ.ப., குன்னம் சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் திரு.எஸ். சங்கர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு. சுப்பையா மற்றும் அனைத்துக்கட்சி பிரமுகர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், பெரம்பலூர்.**